அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 10/2024

எனது இலக்கம் : சீஎல்எஸ்/ விஷேட உயர்/2021
நீதி,பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்
தொழில் அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.

2024.11.08

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்துத் திணைக்களத் தலைவர்கள்

**2024/35 ஆம் இலக்கத்துடைய 2017.06.21 ஆந்திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர்சேவைப்பிரமாணத்தின்படி நூலகர் சேவையின் விஷேட தரத்துக்கு தரமுயர்த்துதல்**

2024/35 ஆம் இலக்கத்துடைய 2017.06.21 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர் சேவைப்பிரமாணத்தின் 10.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நூலகர் சேவையின் விஷேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்காக நூலகர் I ஆம் வகுப்பில்/ தரத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையுடைய இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் முனைப்பான சேவையில் உள்ள நூலகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விஷேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான தகைமைகள்

i. I ஆம் தரத்தின்/ வகுப்பின் நூலகர் பதவியொன்றில் குறைந்தபட்சம் (05) வருட முனைப்பானதும் திருப்பதிகரமானதுமான சேவைக்காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட சம்பள ஏற்றங்கள் (05) ஐந்தினை ஈட்டியிருத்தல்

ii. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் 1/2020, 1/2020(I) மற்றும் 1/2020(II) இன்படி ஒழுக்காற்றுத் தண்டனையொன்றினைப் பெற்றிராதிருத்தல் வேண்டும்

iii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை விதிகளின்படி தரமுயர்வுத் திகதிக்கு முந்தைய 05 வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனிலும் உயர்வான செயலாற்றுகையொன்றினை வெளிப்படுத்தியிருத்தல்

iv. மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ( இலங்கை நூலகர் சங்கத்தின் இணை உறுப்பினர் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்)

***குறிப்பு :- இச்சேவைப் பிரமாணம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிக்கு*** I ஆம் வகுப்பில் 05 வருட கால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் குறித்த தரத்துக்குரிய மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

03. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைக்குழுவினால் நடாத்தப்படும் சேவைமூப்பு மற்றும் திறமைகளுக்கான புள்ளிகள் வழங்கும் தகைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தப்படும். பின்னர் அம் மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை மற்றும் நிரூபிக்கப்பட்ட திறமை ஒழுங்கின் அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில், விசேட தரத்திற்கான பதவி உயர்வானது; அரசாங்க பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

*04. (அ) நேர்முகப்பரீட்சையில் புள்ளி வழங்கும் பிரதான துறைகள் மற்றும் புள்ளி அளவுகள்*

| **புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்** | **அதிகபட்சப்புள்ளி அளவுகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|
| **சேவை அனுபவம்**<br>உரிய அடிப்படைத் தகைமைகளைத் தாண்டி பூர்த்தி செய்துள்ள முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் | 50 | **பொருந்தாது** |
| **திறமை**<br>சந்தர்ப்பத்துக்கேற்ப பொதுச்சேவை ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்படும் புள்ளி நடைமுறைகளின்படி திறமை தீர்மானிக்கப்படுகின்றது | 45 | |
| **நேர்முகப்பரீட்சையில் காட்டப்பட்ட திறமை** | 05 | |
| **மொத்தம்** | 100 | |

(ஆ) *புள்ளி வழங்கும் முறை*

- **சேவை அனுபவம்**

I. தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்துக்கு (05 வருடங்கள்) மேலதிகமாக அதிக மேலதிக முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த புள்ளிகளின் அளவும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அப்புள்ளி அளவுக்கு சமவிகிதமாக அவர்களது மேலதிக சேவைக்காலத்துக்கு கணக்கிடப்பட்ட புள்ளிகளின் அளவும் வழங்கப்படுகின்றது. சேவை மூப்புக்கு புள்ளி வழங்கப்படும் விதம் இணைப்பு - I மூலம் காட்டப்படுகின்றது.

- **திறமை**

II. திறமைக்கான புள்ளிகளின் அளவு 45 ஆகும். திறமைக்குப் புள்ளி வழங்கும் விதம் இணைப்பு - I மூலம் காட்டப்படுகின்றது

III. நேர்முகப்பரீட்சையில் காட்டப்டும் திறமைக்கான மொத்தப் புள்ளிகள் 05 ஆகும். அந்நேர்முகப்பரீட்சையில் திறமைக்குப் புள்ளி வழங்கப்படும் முறை இணைப்பு - I இன் மூலம் காட்டப்படுகின்றது

05. இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் சேவைப்பிரமாணத்தின் 10.3.1.2 ஆம் பிரிவின் மூலம் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரர்களால் அடிப்படைத் தகைமைகள் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் நேர்முகப்பரீட்சையில் காட்டப்பட்ட திறமையினைக் கருத்திற்கொண்டு நேர்முகப்பரீட்சைத் திகதி முதல் விஷேட தரத்துக்கு தரமுயர்வு மேற்கொள்ளப்படுகின்றது. நேர்முகப்பரீட்சைத் திகதிக்கு முனைப்பான சேவையில் உள்ள உத்தியோகத்தர்களது மாத்திரம் தகைமைகள் பரீட் சிக்கப்படும்.

06. **இந்தப்பதவி உயர்வு நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி முதல் அமுலில் இருக்கும்**

07. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட பிற அரசாங்க நிறுவனங்களில் இலங்கை அரசாங்க நூலகர் சேவைக்குரித்தான தரமுயர்த்தல்களுக்கு அடிப்படைத் தகைமை கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களும் இத்துடன் இணைக்கபட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்தி விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ், நியமனக்கடிதம், சேவை உறுதிப்படுத்தல் கடிதம், தரமுயர்த்தல் கடிதம், கல்விச் சான்றிதழ், மற்றும் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏனைய சான்றிதழ்களின் உண்மைப்பிரதிகளாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தமது அமைச்சின் செயலாளரது பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்

08. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2024.12.13** ஆகும்

09. தயவு செய்து இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உரிய உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தவும்

ஒப்பம்/ எஸ். ஆலோகபண்டார

செயலாளர்

நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு

தொ.பே இல : 0112-699966

தொலை நகல் : 0112-690100

மின்னஞ்சல் : gov.librarianservice@gmail.com

## நூலகர் சேவையில் விஷேட தரத்துக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சையின் புள்ளி வழங்கல் நடைமுறை

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புகள் | ஒவ்வொரு தலைப்பின் கீழும் வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| **01. சேவை மூப்புக்காக**<br><br>தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான குறைந்தபட்ச முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துக்கு (05 ஆண்டுகள்) மேலதிகமாக, அதிக மேலதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு சேவைமூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த புள்ளிகளின் அளவு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அப்புள்ளி அளவுக்கு சமவிகிதமானவாறு அவர்களது மேலதிக சேவைக் காலங்களுக்கு கணக்கிடப்பட்ட புள்ளிகளின் அளவு வழங்கப்படுகின்றது.<br><br><u>சேவைமூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகள்</u><br><br>அதிகமான மேலதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு மேற் கூறப்பட்ட சேவைக்காலம் X உத்தி யோகத்தரது மேலதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் (வருடங்கள் x 12 + மாதங்கள் | 50 |
| **02. திறமைக்காக**<br><br>**(அதிகபட்ச புள்ளிகள் கிடைக்கும் தகைமைகள் மட்டுமே கருத்திற்கொள்ளப்படும்.)** | 45 |
| **2.1 பட்டப்பின் படிப்புத் தகைமைகள்** | 15 |

| | |
|---|---|
| 2.1.1 நூலக விஞ்ஞானம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான முதுமாணிப் பட்டம் - (15 புள்ளிகள்) - (காலம் - 02 ஆண்டுகள் மற்றும் ஒரு ஆய்வு உள்ளடங்க வேண்டும்.<br><br>2.1.2 நூலக விஞ்ஞானம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா - (10 புள்ளிகள்)<br><br>**குறிப்பு - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இத்துறைக்கு ஏற்புடையவாறு பட்டப்பின் படிப்பை வழங்குவதற்கு பொருத்தமானதென பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பட்டப்பின் பட்டம் / பட்டப்பின் டிப்ளோமோ கற்கைநெறியாக இருக்க வேண்டும்.** | |
| **2.2 தொழில் தகைமைகள்**<br><br>2.2.1 இலங்கை நூலகர் சங்கத்தின் முழு அங்கத்துவத்தைப்பெற்று அவ்அங்கத்துவத்தை இற்றைப்படுத்தி பேணுகின்ற ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம், அதிகபட்சமாக 05 வருடங்கள் வரையில் புள்ளிகள் வழங்கப்படும். | 10 |
| **2.3. கணிணி விஞ்ஞானம் தொடர்பான தகைமைகள்**<br><br>2.3.1. கணிணி விஞ்ஞான டிப்ளோமா – **(10 புள்ளிகள்)**<br><br>(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் அல்லது பாராளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட தேசிய தொழிற்கல்வித் திறமை (NVQ) மட்டம் 05 அல்லது 1500 மணித்தியாலங்களுக்குக் குறையாத கனினி டிப்ளோமா அல்லது அதனிலும் உயர் மட்ட கற்கைநெறியொன்றை மேற்கொண்டிருத்தல் மற்றும் ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கல்வி காலத்தை நிறைவு செய்திருத்தல் | 10 |

| | |
|---|---|
| 2.3.2 கணிணி விஞ்ஞானச் சான்றிதழ் – **(05 புள்ளிகள்)**<br><br>(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் அல்லது பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொண்ட தேசிய தொழிற்கல்வித் திறமை (NVQ) மட்டம் 04 இன் கற்கைநெறியை நிறைவு செய்திருத்தல் அல்லது அதற்குச் சமனான தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>2.3.3 நூலக மென்பொருள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் - **(02 புள்ளிகள்)**<br><br>**(ஒரு கட்டமைப்புக்கு 02 புள்ளிகள் வீதம் உரித்தாகும்.)**<br><br>**2.4 புத்தாக்கங்கள் /வெளியீடுகள்**<br><br>2.4.1 புத்தாக்கங்கள் -<br>• தனி - (02 புள்ளிகள்)<br>• குழு- (01 புள்ளி)<br><br>2.4.2. ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் (பட்ட / பட்டப்பின் கற்கைக்கு ஏற்புடையதாக்கப்பட்ட ஆய்வுகள் தவிர)<br>• தனி - (02 புள்ளிகள்)<br>• குழு - (01 புள்ளி)<br><br>**குறிப்பு - (அந்தத் துறைக்கு ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட கல்வி இதழில் / இதழில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.)** | **10** |

| | |
|---|---|
| 2.4.3. அறிக்கைகள்/ கடிதங்கள்<br><br>• தனி - **(01 புள்ளி)**<br><br>• குழு - **(0.5 புள்ளிகள்)**<br><br>**குறிப்பு - (மேலே உள்ள ஆவணங்கள் நூலகர் சேவை அல்லது நூலக விஞ்ஞான மற்றும் தகவல் விஞ்ஞான விடயப்பரப்புக்கு ஏற்புடையதாக அச்சு ஊடகமொன்றில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்னணு ஊடகத்தில் வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும்.)** | |
| **03. நேர்முகப்பரீட்சையில் காட்டப்படும் திறமைகளுக்கு:**<br><br>அ) தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br><br>ஆ) தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br><br>இ) ஆளுமை - 01 புள்ளி | **05** |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

**மாதிரி விண்ணப்பப்பபடிவம்**

**2024/35 ஆம் இலக்கத்தையுடைய 2017.06.21 ஆந்திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர் சேவைப்பிரமாணத்தின்படி நூலகர் சேவையின் விஷேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. சேவை நிலையம்

   i. அமைச்சு : ..........................................................................................................

   ii. திணைக்களம் : .....................................................................................................

   iii. உப அலுவலகம் : ..................................................................................................

2. உத்தியோகத்தரது முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி

   ...........................................................................................................................................

   ...........................................................................................................................................

3. முதலெழுத்துக்களுடன் பெயர் : .................................................................................................

4. பெயர் மாற்றமிருப்பின் திருத்தப்பட்ட பெயர் : ...............................................................................

   ...........................................................................................................................................

5. பிறந்த திகதி : ..........................................................................................................

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................................................

7. நிரந்தர வசிப்பிட முகவரி : ..............................................................................................

8. தொலைபேசி இலக்கம் ( கையடக்க ) : ..................................................................................

   ( அலுவலக ) : ..................................................................................

9. நூலகர் பதவிக்கு முதலில் நியமனம் பெற்ற திகதி ( III ஆம் வகுப்புக்கு ) : ..............................

   I. நியமனக்கடிதத்தின் இலக்கம் : ..................................................................

10. தாங்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? : ஆம் / இல்லை

I. நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ...................................................................

11. நூலகர் வகுப்பு /தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி : .........................................................

12. நூலகர் வகுப்பு/தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி: .........................................................

13. 2024/35 ஆம் இலக்க 2017.06.21 ஆந்திகதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் அத்தியாயம் 10.3 மற்றும் பின்னிணைப்பு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ள தகைமைகள் ( இணைப்பு 01 ) :

I. திறமை : ..............................................................................................................................

- பட்டப்பின் படிப்புத் தகைமைகள்:பூர்த்தி செய்துள்ளார் ☐ பூர்த்தி செய்யவில்லை ☐
- இலங்கை நூலகர் சங்கத்தின் அங்கத்துவம் : சங்க அங்கத்துவம் பெற்ற திகதி - .................

  சங்க அங்கத்துவம் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை - .............................

- கணிணி விஞ்ஞானம் தொடர்பான தகைமைகள் :

  .........................................................................................................

- வெ ளியீடுகள் மற்றும் புத்தாக்கங்கள் : தனி ☐ குழு ☐

  வெ ளியீடு பற்றிய தகவல்கள் :-

  .....................................................................................................................................

  .....................................................................................................................................

  .....................................................................................................................................

14. I. 1997.08.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் சேவைப்பிரமாணத்தில்

- உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளது ☐
- உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை ☐
- பொருத்தமற்றது ☐

II. 2009.09.02 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் சேவைப்பிரமாணத்தில்

- உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளது ☐
- உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை ☐
- பொருத்தமற்றது ☐

III. 2016.08.09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் சேவைப்பிரமாணத்தில்

- உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளது ☐
- உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை ☐
- பொருத்தமற்றது ☐
-

15. வகுப்பு I இன் 05 வருட முனைப்பான சேவைக்காலம் முழுமையடையும் திகதி : ........................

16.......................................................................................................................................

அமைச்சின்/ திணைக்களத்தின்/ அலுவலகத்தின் நூலகர் சேவையின் வகுப்பு/ தரம் I இன் உத்தியோகத்தராக சேவையாற்றும் ..........................................................................................

.......................................................................... (முழுப்பெயர்) ஆகிய என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என இலக்கம் 2024/35 ஐக்கொண்ட 2017.06.21 ஆந்திகதிய அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர் சேவைப்பிரமாணக் குறிப்பின் 10.3 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விஷேட தரத்துக்கு தரமுயர்வுபெற தகைமையுடையவர் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி: ............................................... ஒப்பம்: ........................................................

## திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்

................................................................................... அமைச்சின் / திணைக்களத்தின்/ அலுவலகத்தின் வகுப்பு/ தரம் I இன் நூலகர் பதவியை வகிக்கும் திரு/ திருமதி/ செல்வி ...................................................................... விஷேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் 1 முதல் 16 வரையிலான தகவல்கள் அவரது தனிப்பட்ட கோப்பிற்கேற்ப சரியானவை என சான்றளிக்கின்றேன். இவ்உத்தியோகத்தர் தொடர்பாக பின்வரும் தகவல்களை சமர்ப்பிக்கிறேன்.

1. உத்தியோகத்தரால் சுற்றறிக்கை இலக்கம் 02 மூலம் காட்டடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி..........................................................................................................

2. உத்தியோகத்தர் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளாரா? ..........................................................................................................

3. உத்தியோகத்தர் வகுப்பு / தரம் I இற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் பெற்றுள்ள பகுதி சம்பளம்/ சம்பளமற்ற விடுமுறை விவரங்கள்

| பகுதிச் சம்பள/ சம்பளமற்ற விடுமுறை பெற்ற காலப்பகுதி | நாட்களின் எண்ணிக்கை | | | காரணம் |
|---|---|---|---|---|
| | வருடம் | மாதம் | திகதி | |
| | | | | |
| | | | | |
| | | | | |

4. தரமுயர்வுக்கு விண்ணப்பிக்கும் திகதியில் உத்தியோகத்தர் இணைந்த சேவையின் நூலகராக சேவையாற்றிய முழு சேவைக்காலம் :

   வருடம்: ............. மாதம்: ............. நாள்: ................

5. தரமுயர்வுக்கு விண்ணப்பித்த திகதியில் வகுப்பு/ தரம் I இல் சேவைக்காலம்:

   வருடம்: ............. மாதம்: ............. நாள்: ................

6. உத்தியோகத்தர் வகுப்பு/தரம் I இற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் சகல சம்பள ஏற்றங்களையும் ஈட்டி முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலமொன்றைப் பூர்த்தி செய்துள்ளாரா? :

( வகுப்பு/தரம் I இற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் 2022.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் )

***உத்தியோகத்தர் பூர்த்தி செய்துள்ள காலப்பகுதிக்கிணங்க அட்டவணையைத் தயாரித்து இணைப்பாகச் சமர்ப்பிக்கவும்**

| **தொடர் இலக்கம்** | **சம்பள ஏற்றத் திகதி** | **ஈட்டிய சம்பளம்** | **சம்பள ஏற்ற ஆண்டுக்கு ஏற்புடைய செயலாற்றுகை அறிக்கையின் மதிப்பீட்டாளரின் பரிந்துரை *** | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **மிக நன்று** | **நன்று** | **திருப்திகமானது** | **திருப்திகரமற்றது** |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

*( *உரிய கூட்டினுள் √ அடையாளமிடுக. )*

7. உத்தியோகத்தர் இணைந்த சேவையின் நூலகர் சேவையின் வகுப்பு / தரம் I இற்கு நியமனம் பெற்ற பின்னர் இதுவரை உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? ......................................

7.1. அவ்வாறாயின் ஏற்புடைய தகவல்கள் :-

I. குற்றத்தின் தன்மை ( அட்டவணை I அல்லது II இன்படி ): .......................................

II. வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டனையின் தன்மை: ...................................

..............................................................................................................................

III. சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்பட்டிருப்பின் அந்த ஆண்டுகள்: ..............................

| **காலப்பகுதி** | **நாட்களின் எண்ணிக்கை** | | | **காரணம்** |
|---|---|---|---|---|
| | **வருடம்** | **மாதம்** | **நாட்கள்** | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**8. அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

.......................................... ஆம் திகதி முதல் இவ் உத்தியோகத்தரை விஷேட தரத்துக்கு தரமுயர்த்த பரிந்துரை செய்கிறேன்/ செய்யவில்லை

திகதி : ..................................     திணைக்களத் தலைவரின் கையொப்பம் : ..........................

பெயர் :

பதவி :

பதவி முத்திரை :

**9. அமைச்சின் செயலாளரது பரிந்துரை :**

திணைக்களத் தலைவரால்மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரை என்னாலும் பரிந்துரைக்கப்படுகின்றது

திகதி : ......................................     அமைச்சின் செயலாளரது ஒப்பம் : ..............................

பெயர் :

பதவி :

பதவி முத்திரை :